**தேதி :** 07.01.2026 **SC.No. :** 430/2025 PW :1 கணேசன்

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

என்னிடம் சிடி உள்ளது அதை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. அதை நான் தாக்கல் செய்ய விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.07 19:01:06 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 430/2025**</u>

<u>**வழக்கு சாட்சி PW-2**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கஜேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலாயுதம் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 7th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டல் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அசா.1 கணேசன் எனது தம்பி. எதிரியை எனக்கு தெரியும். சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

கடந்த 21.06.2022ம் தேதி அதிகாலை 1.20 மணிக்கு எனது தம்பி கணேசன் வீட்டின் முன் பகுதியில் திடீரென புகை வந்துக்கொண்டிருந்தது என்றும், அப்போது வீட்டிற்குள் இருந்து எனது தம்பி கதவை திறக்க முயற்சி செய்தபோது திருக்க முடியாததால் எனக்கு தகவல் சொல்லி நான் வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல. கதவை திறந்து எனது தம்பியையும்,அவரது குடும்பத்தினரையும் வெளியே கொண்டு வந்தேன் என்றால் சரியல்ல. கலைவாணன் என்பவரது வீட்டின்

சிசிடிவி கேமராவை பார்த்தபோது எதிரி இடுப்பில் ஒரு அருவாளை வைத்து கொண்டு கையில் பெட்ரோல் பாட்டிலை வைத்து கொண்டு சென்றது தெரியவந்தது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.07 19:01:13 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 430/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலைவாணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வள்ளிநாயகம் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | நல்லூர் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 7th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் ரைஸ் மில் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அசா.1 கணேசன் எனது பக்கத்து வீட்டுக்காரர். எதிரியை எனக்கு தெரியும். சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

கடந்த 21.06.2022ம் தேதி அதிகாலை 1.20 மணிக்கு கணேசன் வீட்டின் முன் பகுதியில் திடீரென புகை வந்துக்கொண்டிருந்தது என்றும், அப்போது வீட்டிற்குள் இருந்து கணேசன் கதவை திறக்க முயற்சி செய்தபோது திறக்க முடியாததால் கணேசனின் அண்ணனுக்கு தகவல் சொல்லி அவர் வந்து பார்த்தார் என்றால் சரியல்ல. கதவை திறந்து கஜேந்திரன் என்பவர் கணேசனையும், அவரது குடும்பத்தினரையும் வெளியே கொண்டு வந்தார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் உள்ள

சிசிடிவி கேமராவை பார்த்தபோது எதிரி இடுப்பில் ஒரு அருவாளை வைத்து கொண்டு கையில் பெட்ரோல் பாட்டிலை வைத்து கொண்டு சென்றது தெரியவந்தது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.07 19:01:21 +0530